DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.118/2023**

**prosecution witness: PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீவரத்தினம் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>04.09.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் தற்போது ஏர்வாடி தர்கா வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2022ம் தேதி 09.00 மணியளவில் மண்டபம் சார்பு ஆய்வளார் கோட்டைச்சாமி, பாண்டியராஜன், காவலர் 1494 ஊர்காலன் ஆகியோர் சகிதம் மரைக்காயர் பட்டிணம் சோதனைச் சாவடியில் வாகன தணிக்கைசெய்து கொண்டிருந்தபோது மண்டபத்திலிருந்து வேதளை நோக்கி வந்த TN 65 AD 0634 பஜாஜ் என்ற வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் வந்த வேதாளை வலையர்வாடியைச் சேர்ந்த ராமசந்திரன் மகன் வேல்முருகன் என்பவரை பிடித்து அவர் ஓட்டி வந்த வாகனத்தை சோதனை செய்தபோது ஆட்டோவில் பிளாஸ்டிக் சாக்குப்பையில் 180 ml அளவுள்ள monitor rum 98 பாட்டில்கள், diamond rum 33 பாட்டில்கள், top star brandy 46 பாட்டில்கள், golden eagle brandy 41 பாட்டில்கள், jet brandy 105 பாட்டில்கள், honey day brandy 11 பாட்டில்கள், mens club brandy 22 பாட்டில்கள், copper brandy bottle -1, MC Lenin brandy - 2 bottles, MC dowels brandy -1 bottle, மொத்தம் 360 பாட்டில்களும், 375 ml அளவுள்ள mens club -30 பாட்டில்களும், old men star brandy - 11 bottles, accord brandy - 25 botttles, black pearl brand 8 bottles, monitor brandy - 25 bottles, மொத்தம் 99 பாட்டில்கள் ஆக மொத்தம் 459 பாட்டில்களும், மொத்தம் 101 லிட்டர் 925 மி.லிட்டர் அளவுள்ள மதுபான வகைகளை அதிக லாபத்திற்கு விற்கவேண்டி, வாங்கி செல்வதாக தெரிவித்தவரை காரணம் கூறி கைது செய்தும், தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் போலீஸ் பார்ட்டி முன்னிலையில் அத்தாட்சியில் மதுபாட்டில்களையும், அதை ஏற்றி வந்த ஆட்டோவையும் கைப்பற்றி எதிரிமற்றும்

சொத்துக்களுடன் 10.30 மணிக்கு மண்டபம் காவல்நிலையம் வந்து எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்துள்ளார்.

2.எதிரி மீது மண்டபம் காவல்நிலையக் குற்ற எண்.196/2022. பிரிவுகள்.4(1(aaa) TNP (Transport) Act படி வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அத்ததாட்சி அ.சா.ஆ.4** ஆகும்.

3. பின்னர் நான் எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு த.கா.1042 பாண்டியராஜன், கா.ஊர்க்காலன், சார்பு ஆய்வாளர் கோட்டைச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நான் எதிரியை விசாரணை செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினேன்.

4. பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆட்டோவை மதுவிலக்கு அமலாக்கசட்டப்பிரிவு 14(1) ன் GO.MS.No.315/14 ன் படி அரசுடமையாக்கி அதை பொதுஏலத்திற்கு மதுவிலக்கு காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் –95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த **படிவம் –95 அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் நீதிமன்ற உத்தரவின் படி வழக்கு சொத்துக்களான மதுபாட்டில்களை கொட்டி அழிக்கப்பட்டது. காலி பாட்டில்கள் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை கருவூலத்தில் செலுத்தப்பட்டது.

5.பின்னர் எனது விசாரணைமுடித்துஎதிரியாக பிரிவுகள்.4(1(aaa) TNP (Transport) Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1.இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு அத்தாட்சி என்னால் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிபட்டியலில் யார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது, அத்தாட்சி தயார் செய்த விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2. Prohibition Act படி ஆய்வாளர் தான் அத்தாட்சி தயார் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எல்லாம் ஏதாவது ஒரு மதுபானக்கடையில் திருடு போயிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. அவ்வாறு திருடு போனதாக எங்கள் சரகத்தில் புகார் எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.

3.மரைக்காயர்பட்டிண சோதனை சாவடியில் போலீசார் மற்றும் பொதுமக்கள் எப்போதும் இருப்பார்கள் என்றால் சரிதான். அவர்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள இரண்டு காவலர்கள் தான் அன்றைய தினம் பணியில் இருந்தார்கள். 02.10.2022 ம் தேதி சார்பு ஆய்வாளர் மட்டும் சோதனை சாவடிக்கு தனியாக சென்றார்.

4. மேற்படி சொத்துக்கள் எல்லாம் அரசு மதுபானக்கடைகளில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் மதுபானக்கடையில் 6 பாட்டில்கள் வரை வாங்கலாம் என்றால் சரிதான். எதிரியை விசாணை என்ற பெயரில்

காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று புள்ளிவிபரத்திற்காக இதுபோன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5.இந்த வழக்கில் சொல்லப்படுவது போல் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல . இந்த வழககில் எனக்கு கீழ் பணிபுரியும் காவலர்களை வைத்து எந்தவொரு விசாரணையும் செய்யாமல், அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு பின்னிட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த குற்றத்திற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.